# தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.

**ந.க.எண். 50532 / எம் / இ1 / 2019, நாள் 29.10.2019.**

பொருள் பள்ளிக்கல்வி – அனைத்துவகைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் பாதுகாப்பு – பயன்பாடில்லா ஆழ்துளை கிணறுகள் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதை உறுதி செய்தல் – மாணாக்கர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல் – அறிவுரைகள் வழங்குதல் சார்பு.

************

தமிழகத்தில், பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்துவகை பள்ளிகளிலும் பயிலும் மாணாக்கர்களின் பாதுகாப்பிற்கென, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள, அவ்வப்போது பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. பள்ளி மாணாக்கர்களின் பாதுகாப்பிற்கென, ஆய்வு அலுவலர்களும், பள்ளித்தலைமை ஆசிரியர்களும் கூடுதல் கவனம் செலுத்திடும் பொருட்டு, கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. பள்ளி வளாகத்தில், கட்டிட பராமரிப்பு பணிகள் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு மாணாக்கர்கள் செல்ல தடைவிதிக்கவும், அவ்விடங்களை சுற்றி பாதுகாப்பான தடுப்பு அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.
2. பள்ளி வளாகத்திற்குள், மாணாக்கர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய வகையில் உள்ள திறந்தநிலை கிணறுகள் / நீர்நிலைத் தொட்டிகள், இடிந்துவிடும் நிலையில் உள்ள கட்டிடங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை உடன் அகற்றிட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.
3. தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பள்ளி வளாகங்களில் ஆழ்துளை கிணறுகள் இருந்தால் அவை பாதுகாப்பாக உள்ளனவா என ஆய்வு செய்ய வேண்டும்.
4. பள்ளி வளாகத்தில் பயன்பாடில்லா ஆழ்துளை கிணறுகள், கழிவுநீர் தொட்டிகள், கிணறுகள், நீர் சேமிப்பு தொட்டிகள் போன்றவற்றை நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
5. மூடப்பட்ட ஆழ்துளை கிணறுகள் மற்றும் தொட்டிகள் உள்ள இடங்களை சிறப்பு குறியிட்டு, தனியாக அடையாளப் படுத்த வேண்டும். அவற்றை தரை மட்டத்தில் இருந்து உயர்த்தி, பாதுகாப்பு அம்சங்களை ஏற்படுத்த வேண்டும்.
6. பள்ளி வளாகத்தில் ஆபத்தானநிலையில் உள்ள உயர்மின்அழுத்தமுள்ள மின்கம்பங்கள், மற்றும் அறுந்து தொங்கக்கூடிய மின்கம்பிகள் இருப்பின் அவைகளை உடனடியாக அகற்றப்படவேண்டும்.

7. பள்ளிவளாகம் தூய்மையாக பராமரிக்கப்படவும், மாணவர்களுக்கு போதிய பாதுகாப்பினை உறுதி செய்திடவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
8. மாணவ மாணவியருக்கு ஆழ்துளை கிணறுகள், கழிவுநீர் தொட்டிகள், ஏரி, குளங்கள்,வாய்க்கால்கள் ஆகியவற்றின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
9. தலைமை ஆசிரியர்கள், அவ்வப்போது பள்ளியின் பெற்றோர்–ஆசிரியர் கழகம் வாயிலாக, மாணாக்கர்களின் பெற்றோர்களை பள்ளிக்கு அழைத்து, அவர்களிடம் பள்ளி வளாகத்திலும், வெளியிலும், மாணாக்கர்களின் பாதுகாப்பிற்கென மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து விவாதித்து, அதன்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி தலைமை ஆசிரியர்கள் செயல்படுவதை, முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர்கள் பள்ளிப்பார்வை மற்றும் ஆய்வின்போது கண்காணிக்க வேண்டும் எனவும், தலைமை ஆசிரியர்கள் கூட்டத்திலும், மாணாக்கர்களின் பாதுகாப்பு குறித்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் / மாவட்டக்கல்வி அலுவலர்கள் தக்க அறிவுரைகள் வழங்கிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்.

நகல்: அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.